**கவனிக்க.**-2007.09.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1515 - 2007 සැප්තැම්බර් 14 වැනි සිකුරාදා - 2007.09.14

1515 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 814 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 815 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 818 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 821 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, செத்தெம்பர் 21 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, செத்தெம்பர் 07 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

வவுனியா பொது வைத்தியசாலை

**தேவையானவழங்கல்கள் / சேவைகள் - 2008**

வவுனியா பொது வைத்தியசாலைக்கு பின்வரும் வழங்கல் சேவைகளுக்கான பெறுகைகள் 2007 திசெம்பர் 21 ஆந் திகதி முதல் 2008 திசெம்பர் 20 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு கோரப்படுகின்றன.

**1. வழங்கல்கள் / சேவைகளின் விவரமும் வைப்புத் தொகைகளும் :**

| இல. | விவரம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| (அ) | உணவு வழங்கல் (சமைத்த, சமைக்காத) | 1,000.00 | 50,000.00 | 250,000.00 |
| | அழுக்கு துணிகளை சலவை | | | |
| (ஆ) | செய்தல் தொகுதி I | 500.00 | 15,000.00 | 75,000.00 |
| | தொகுதி II | 500.00 | 15,000.00 | 50,000.00 |
| (இ) | பாதுகாப்பு சேவை | 1,000.00 | 50,000.00 | - |
| (ஈ) | துப்பரவு சேவை | 1,000.00 | 50,000.00 | - |
| (உ) | கணனி பராமரிப்பு | 500.00 | 10,000.00 | - |
| (ஊ) | குளிரூட்டி பராமரிப்பு | 1,000.00 | 15,000.00 | - |
| (எ) | பிணவறை குளிரூட்டி பராமரிப்பு | 1,000.00 | 5,000.00 | - |
| (ஏ) | மின் உயர்த்தி பராமரிப்பு சேவை | 2,000.00 | 25,000.00 | |

2. **பெறுமதி ஆவணம்**.- 15.09.2007 ஆந் திகதிக்கு பின்னர் அந்தந்த பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதம் ("அ" விற்கும், "ஆ" விற்கும், மாத்திரம் - பொது 170 படிவம்) சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது இத்தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் இருந்து வங்கி உத்தரவாதப்பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்கனவே பொது வைத்தியசாலையில் ஒப்பந்த சேவையில் ஈடுபடுபவர்களும் பெறுமதி ஆவணத்தை புதிதாக விண்ணப்பம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வகையிலும் முன்னைய ஒப்பந்தத்துடன் இவற்றை தொடர்புபடுத்தாது புதிதாக விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

3. **வைப்புக்கள்**.- பெறுகைக்கான வைப்புத் தொகைகளை (மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும்) பொது வைத்தியசாலை, நிதி முகாமைத்துவ அருகில் உள்ள கொடுப்பனவு கிளையில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படாத பெறுகை மனுதாரர்களுக்கு பெறுகைகளுக்கான ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

4. **வியாபார பதிவு சான்றிதழ்**.- பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் வியாபார பதிவு படிவத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **அனுபவ சான்றிதழ்**.- கடந்தகால நிகழ்கால அனுபவ சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காவல் சேவை வழங்கும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. **வரி**.- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளுக்கும், சகல வரி செலுத்துதல்களுக்கும் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் உட்படுதல் வேண்டும்.

7. **பெறுகைப்படிவங்கள்/ ஆவணங்கள்.**- பெறுகை ஆவணங்கள் 14.09.2007 ஆந் திகதி தொடக்கம் 29.09.2007 ஆந் திகதி மதியம் 12.00 மணி வரையும் வவுனியா பொது வைத்தியசாலை நிதி முகாமைத்துவ அலகின் கணக்கு கிளையின் வேலை நேரங்களில் வழங்கப்படும். பெறுகைப்படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் முதலாம் பிரதி. இரண்டாம் பிரதி என குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

8. **பெறுகைகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை.**- சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் "தலைவர், பெறுகைகள் குழு, பொது வைத்தியசாலை , வவுனியா" என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுபப்படுதல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில், "வழங்கல்கள்/சேவைகள் 2008........." என குறிப்பிட்டு இங்கு கோடிட்ட இடத்தில் சேவையின் தன்மையும் குறிப்பிடப்படல் வேண்டும். நேரடியாக வழங்கினால் பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒவ்வோர் வழங்கல்கள், சேவைக்கும் தனித் தனியாக விண்ணப்பித்தல் வேண்டும். பெறுகைகள் வைப்புத் தொகையை செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் பிரதியை பெறுகைப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

9. **இறுதி திகதி.**- சகல முத்திரை இடப்பட்ட பெறுகைகளும் 01.10.2007 மு. ப. 9.00 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

10. **பெறுகைகள் திறத்தல்.**- பெறுகை நேரம் முடிவடைந்ததனை உடனடுத்து பெறுகைப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும் போது சமூகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேற்படி பெறுகை கோரல்களை இரத்து செய்யவோ நிறுத்தி வைக்கவோ புதிதாக கோருவதற்கோ பெறுகைகள் குழுவுக்கு பூரண அதிகாரமுண்டு. பெறுகை தொடர்பான பெறுகைகுழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும். மேலதிக விவரங்களை 060- 2241561 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைகள் குழு,

பொது வைத்தியசாலை,
வவுனியா.

9- 453

## ஆய விற்பனையும் குத்தகையும்

### திவுலபிட்டி பிரதேச செயலகப் பிரிவில் 2008 சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2008 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள காலப்பகுதிக்குள் கள்ளுத் தவறணை விற்பனைக்கு விற்றல்

2008, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2008, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில், குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பத்திரங்கள் யாவும் தற்போது அமுலில் இருக்கும்போது நிபந்தனைகளுக்கு அமைவாகவும், 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் "............................................இலக்க..............................கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி" எனக்குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2007.10.03 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக திவுலபிட்டிய பிரதேச செயலாளருக்கு பதிவு தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட காலத்துள் திவுலபிட்டிய பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களுக்கான பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.

4. கேள்வி மனுக்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2007.10.03 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரங்கள் யாவும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் திவுலபிட்டிய பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை தவறும் தவறணைகள் 2007.11.06 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு விற்பனையாகும். அப்பொழுது ஏற்றுகொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை திவுலபிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தமாரா டீ பெரேரா,
பிரதேச செயலாளர்,
திவுலபிட்டிய.

பிரதேசச் செயலகம்,
திவுலபிட்டிய,

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 27-தாகொன்ன இல. 1 | திவுலபிட்டிய | தாகொன்ன | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 4,000 | 2007.10.02 மு. ப. 10.30 |

9-451

---

## ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகைக்கு விற்றல் - 2008

(2008, சனவரி 1 ஆந் திகதி முதல் 2008, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில்)

2008, சனவரி 1 ஆந் திகதி முதல் 2008, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப்பத்திரங்கள் யாவும் தற்போது அமுலில் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய உரிய படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதலும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "................................... இலக்க .................. கள்ளுத் தவறணைக்குரிய கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2007.09.25 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஜா- எல பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்துக்குள் ஜா-எல பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களுக்கான பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.

4. கேள்வி மனுக்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2007.09.25 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் ஜா-எல பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை பெறத்தவறும் தவறணைகள் 2007.10.23 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு விற்பனையாகும். அப்போது ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை ஜா-எல பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டபிளயு. ஏ. விஜித பிரேமபிரிய,
பிரதேச செயலாளர்,
ஜா-எல.

ஜா-எல பிரதேச செயலகம்,
ஜா-எல.
2007.08.27.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கந்தானை | 2007.09.25-காலை 10.30 | 1,500 |
| 02. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | வலிகம்பிட்டிய | 2007.09.25-காலை 10.30 | 1,500 |
| 03. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கனுவனை | 2007.09.25-காலை 10.30 | 4,000 |
| 04. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | ஏகலை மெகொட | 2007.09.25-காலை 10.30 | 5,000 |
| 05. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | தண்டுகம | 2007.09.25-காலை 10.30 | 1,000 |

9-546

---

**மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2008**

கீழே குறிப்பிட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கள்ளுத்தவறணையில் 2008, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2008 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாகவும், நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கு அமைவாகவும் கீழ் குறிப்பிட்ட விதிகளுக்கு அமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2007, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.அன்றைய தினம் கேள்விப்பத்திரம் விற்க முடியாவிடில் 2007, நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி மீண்டும் விற்கப்படும்.

2. விண்ணப்பதாரர்கள் நாட்டில் எந்த பிரதேசச் செயலகத்தில் இருந்தும் பெறக்கூடியதான விண்ணப்பப் படிவத்தில் முறையாக தயாரித்த படிவங்களை இங்கு கீழ்க் காணும் பட்டியலில் உள்ள நிரந்தர வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்காக பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் இணைத்து கடித உறையின் இடதுபக்க மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரையும், இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப்பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது அப்பத்திரத்தில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரக்காரர்கள் தனது கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி அல்லாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரம் விற்கப்படும் திகதியான 2007.10.15 ஆந் திகதி கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகம் அளிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் வழங்குவது 2007.10.15 மு. ப. 10.30 மணிக்கு முடிவடையும்.

5. எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர்கள் எவர் என அறிந்தவுடன் அன்றைய தினம் மு. ப. 12.00 மணிக்கு முன் அத்தகைய கேள்விப்பத்திரக்காரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதாக தீர்மானிக்கப்படும் தொகையை பிணைப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் குத்தகை நிபந்தனையில் கையொப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்களை படல்கும்புர பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டப்ளியூ. எஸ். அய். விஜேசேகர,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2007.08.06.

**அட்டவணை**

***மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட தவறணைகள் - 2008***

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறந்திருக்கும் நேரம் | வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லேவராதொலை கமேவலை | மு.ப. 11.00 முதல் பி.ப. 2.00 மணி வரை பி.ப. 4.00 முதல் பி.ப. 8.00 மணி வரை | ரூ. 500 | 2007, ஒற்றோபர் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணி வரை |

டபிள்யு. எஸ். ஐ. விஜேசேகர,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர,

9-598

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

*கம்பனியின் பெயர் :* பாமொகா சமட் (பிரைவட்) லிமிட்டெட்.
*கம்பனியின் இலக்கம் :* PV60902
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 03.08.2007
*கம்பனி பதிவு செய்யப்பட்ட இடத்தின் விலாசம் :* லகீ டயஸ் ரீ. பக்டரி, பெரலபனாதர.

நிர்வாகி.

9- 327

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

*கம்பனியின் பெயர் :* கங்கசிரிபுர லலனாசவிய (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* PV3262
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 30.01.2007
*கம்பனி பதிவு செய்யப்பட்ட இடத்தின் விலாசம் :* தொலுவ, கம்பளை.

நிர்வாகி.

9- 328

**கூட்டிணைத்தல் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் கம்பனியின் கூட்டிணைப்புத் தொடர்பாக இத்தால் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

*கம்பனியின் பெயர் :* நியூ மக்வின்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.
*கம்பனி இலக்கம் :* PV60627
*பதிவு செய்யப்பட்ட கம்பனியின் அலுவலக முகவரி :* 53- 4/A, கெய்சர் வீதி, கொழும்பு 1

எம். தியாகராஜா,
கம்பனி செயலாளர்.

9- 338

**கூட்டிணைத்தல் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 09 (1) பிரிவின் அடிப்படையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள தனியார் கம்பனிகளாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் தெரிவிக்கின்றோம் :-

"விஸ்டா க்ளோதிங் (பிரைவேட்) லிமிட்டெட்" 2007 யூலை 11 ஆந் திகதி சான்றிதழ் இல. PV60607 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 472, லேக் வீதி, பொரலஸ்கமுவயில் அமைந்துள்ளது.

"வின் ஒஷியன் ஷிப்பிங் லிமிட்டெட் " 2007 யூன் 20 ஆந் திகதி சான்றிதழ் இல. PV3009 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 267/1/1, புளூமெண்டல் வீதி, கொழும்பு - 13 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

"பெரமௌனன்ட் பிரின்ட் (பிரைவேட்) லிமிட்டெட்" 2007 யூன் 21ஆந் திகதி சான்றிதழ் இல. PV60363 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் பெரமௌனன்ட் நிவச, இல. 05, தேவாலய வீதி, பெதியாகொட, களனியில் அமைந்துள்ளது.

"கொமன்சென்ஸ் இல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" 2007 மே 30 ஆந் திகதி சான்றிதழ் இல. PV60107 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இல. 181, வீர மாவத்தை, பங்களாவத்தை, கொட்டாவ.

"சுவிஸ் லக்ஷரி குரூப் (பிரைவேட்) லிமிட்டெட்" 2007 ஓகத்து 07 ஆந் திகதி சான்றிதழ் இல. PV60932 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 08A, சேர். எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

"ஹார்பர் இம்போர்ட் (பிரைவேட்) லிமிட்டெட்" 2007 மே 23 ஆந் திகதி சான்றிதழ் இல. PV60060 இன் கீழ் கூட்டிணைக்கப் பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 08A, சேர். எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

"பேர்ன் ஹில் அசேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" 2007 யூன் 12 ஆந் திகதி சான்றிதழ் இல. PV60226 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 08A, சேர். எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

"கோல்டன் மொனார்ச் ரெஸிடென்சீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" 2007 ஓகத்து 08 ஆந் திகதி சான்றிதழ் இல. PV60943 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 676, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

(கம்பனிச் செயலாளர்கள்),
கம்பனி செயலாளர்கள்,
(பிரைவேட்) லிமிட்டெட்.

இல. 810, மருதானை வீதி,
கொழும்பு 10

9- 378

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் 2007 யூலை 11 ஆந் திகதி முதல் Nokia Lanka (Private) Limited ஆனது Nokia Siemens Networks Lanka (Private) Limited எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவு நியதிகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. கம்பனியின் பெயர் : Nokia Siemens Networks Lanka (Private) Limited.
2. கம்பனியின் இல. : N (PVS) 47654
3. பதிவு அலுவலகம் : 216 டி சேரம் பிளேஸ், கொழும்பு - 10 (கம்பனிச் செயலாளர்களின் அலுவலகம்).

சபையின் கட்டளைப்படி,

கோர்பரேட் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்
Nokia Siemens Networks Lanka (Private) Limited
(முன்னர் Nokia Lanka (Private) Limited).

9- 389

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்

அறிவித்தல்

ஹொறைசோன் ரிலையன்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(பி. வி. 60941)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இன்படி, மேற்படி கம்பனியானது 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 8 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு, 99, மாதம்பிட்டிய ரோட், கொழும்பு 15 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

லீகல் கோபரேட் கன்சல்டன்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட்.
கம்பனி செயலாளர்கள்.

192. ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
2007 ஓகத்து 21.

9-401

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க புதிய கம்பனி சட்டத்திற்கமைய கீழ் காணப்படும் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய தருகின்றோம். :-

கம்பனியின் பெயர் : யுனிவர்சஸ் ஒடோ அசெம்பிளி (பிரைவேட்) லிமிட்டெட்.

கம்பனியின் இலக்கம் : PV 60458

2007 யூன் 28 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 451, கண்டி வீதி, களனி.

9- 413/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க புதிய கம்பனி சட்டத்திற்கமைய கீழ் காணப்படும் நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறிய தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : யுவர் புட்ஸ் லிமிட்டெட்.

கம்பனியின் இலக்கம் : PB 3181

2007 யூலை 12 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 451, கண்டி வீதி, களனி.

9- 413/2

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இல. 217, ஜயசிங்க பிளேஸ், ஹெந்தளை, வத்தளை என்னும் முகவரியைச் சேர்ந்த அர்ஜுன வசந்த ஹரிந்திர பெரேரா ஆகிய நான், இதற்கான உறுதிப்படுத்தும் சாட்சிகளான மனெரபிட்டியகே டொன் அலோசியஸ் மற்றும் துவான் நிஸாம் ஹாமித் என்பவர்களின் முன்னிலையில் என்னால் இலங்கையில் நிறைவேற்றப்பட்டு இல. 217, ஜயசிங்க பிளேஸ், ஹெந்தளை, வத்தளை என்னும் முகவரியைச் சேர்ந்த ஹெட்டிகே நிமிலிகா கிறிஸ்டீன் பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டதும், பிரசித்த நொத்தாரிசு யாபா அப்புஹாமிலாகே டொன் நீல் அன்டோனியஸ் விஜேரத்ன என்பவர் அத்தாட்சிப்படுத்தியதும் 1994, பெப்புருவரி 19 ஆந் திகதியையுடையதுமான 2699 ஆம் இலக்க அற்றோணி தத்துவம் இத்திகதி முதல் இரத்துச் செய்யவும் இல்லாதொழிக்கவும் வறிதாக்கப்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

அர்ஜுன வசந்த ஹரிந்திர பெரேரா.

9-427

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

1998 ஆம் ஆண்டின் மே மாதம் 05 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தின் மூலம் அதில் அடங்கும் எனது அற்றோர்ணித் தத்துவதாரராகிய வைக்கால, தபராவில வீதி, "சிரோமி நிவஸ" வில் வசிக்கும் சக்கரவர்த்திகே மல்கா தரங்கி தில்ருக்ஷி பெர்னாந்து என்பவரை நியமித்திருந்ததோடு அந்த அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்து செயலிழக்கச் செய்கிறேன் என்றும், இதன்பின் சக்கரவர்த்திகே மல்கா தரங்கி தில்ருக்ஷி பெர்னாந்து என்பவரால் எனது அற்றோணித் தத்துவதாரராகச் செயற்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் சட்ட ரீதியானதல்ல என்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

எம். என். ஜே. ரஞ்சித் பெர்னாந்து.

9-452

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்ட பிரகாரம் கம்பனி கூட்டிணைத்தல் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

*கம்பனியின் பெயர் :* ஹமீட் ஸ்டோர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது.
*கம்பனி இலக்கம் :* பி.வி. 60859
*பதிவு செய்த திகதி :* 01.08.2007
*கம்பனியின் விலாசம் :* இல. 30, கழுகல மாவத்தை, கேகாலை.

கம்பனிச் செயலாளர்.
ஜே&ஏ மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (தனியார்)
வரையறுக்கப்பட்டது.

9-477

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் உறுப்புரைக்கமைவாக கீழ்வரும் தனியார் கம்பனியானது 2007, ஓகத்து மாதம் ஒன்பதாம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர் :* சுகால் மற்றும் தமனி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* பி.வி. 60888
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 9.08.2007
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 58/5, பெபிலியான வீதி, நிதிமால, தெஹிவளை

கம்பனிச் செயலாளர்.

9-478

---

## கம்பனிகள் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நிமித்தம் கீழ்வரும் கம்பனிகள் பதிவு செய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர் :* பி. எஸ். எஸ். இன்ஸ்ய்ட் எடுகேஷனல் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* பி.வி. 60934
கம்பனி பதிவு செய்யப்பட்ட திகதி : 07.08.2007.
*பதிவு செய்யப்பட்ட விலாசம் :* இல. 37, 1 ஆம் லேன், டி மெல் வத்த, கொஸ்வத்த, நாவல.

*கம்பனியின் பெயர் :ஜெம் ஸ்டார் என்டப்ரைஸஸ்* (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* பி.வி. 61024
*கம்பனி பதிவு செய்யப்பட்ட திகதி :* 14.08.2007
*கம்பனி பதிவு செய்யப்பட்ட விலாசம் :* இல. 63, கெய்ஸர் வீதி, கொழும்பு 11.

ஸீ. ஏ. எஸ். கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

9-495

---

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைத்தல் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, "சிவாரோ இன்டர்நஷனல் லிமிட்டெட்" என்ற கம்பனி கம்பனி 2007, ஓகத்து 9 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறோம் :-

*கம்பனியின் பெயர் :* சிவாரோ இன்டர்நஷனல் எல்ரிடி
*கம்பனி இலக்கம் :* பிபீ 3266

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10,*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2007, ஓகத்து 09.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேவிசஸ் லிமிட்டெட்.
செயலாளர்கள்.

*400, டீன்ஸ் வீதி,*
*கொழும்பு 10,*
*2007, ஓகத்து 30.*

*9-501*

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*ஜீஎல் 2005, என்னும் பதிவிலக்கத்தையுடையதும் இல. 255/2, 1/3, கிருல வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 5 என்னும் முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடையதுமான கம்பனியொன்று ஸ்ரீலங்கா ஜொப்ஸ்நெட் லிமிட்டெட் என்னும் பெயரில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு ஓகத்து 10 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

பணிப்பாளர்கள்,
ஸ்ரீலங்கா ஜொப்ஸ்நெட் லிமிட்டெட்.

*2007 ஓகத்து 27.*

*9-524*

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் கோர்பன் Fபாம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 2007, ஓகத்து 1 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது.*

*கம்பனியின் பெயர் :* கோர்பன் Fபாம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் : பி.வி. 60853.*
*பதிவு அலுவலகம் :* இல. 77, லோவர் டிவிசன், ஓடயா குரூப், நாரங்கல, ஆலிஎல.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏ. ஏ. செனவிரத்ன,
செயலாளர்.

*9-534*

---

### புதிய கம்பனி ஆரம்பிப்பதற்கான சட்ட ரீதியான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் காணப்படும் கம்பனி ஆரம்பிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* வரையறுக்கப்பட்ட பெதல் சீ ஏ லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* 2007, ஓகத்து 1 ஆந் திகதி
*பதிவு செய்யப்படட முகவரி :* இல. 170/6, அல்விஸ் டவுண்,ஹெந்தலை, வத்தளை.

*2007, ஓகத்து 20.*

*9-521*

---

## ஏல விற்பனைகள்

### ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்-தலங்கம கிளை

*1990 இன் வங்கிகளால் கடன்களை மீள அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்ட இல. 4 இன் பிரிவு 4 இன் கீழான விற்பனை)*

**பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை**

***உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ரீ. ஏ. திசாநாயக்க அவர்களால் 2004.08.22 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2064 இல் துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் போகஹவத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டானது மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளை பள்ளேபற்றுவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல பிரிவில் கடுவெல வீதியில், வரிமதிப்பீட்டிலக்கம் 442/ 6 இல் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். பீ. என். மொஹொட்டி அவர்களால் 2005.05.27 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 2753 இல் இரண்டாவது அட்டவணையில் நன்கு விவரிக்கப்பட்ட பாதை உரிமையுடன் அமைந்துள்ளது.***

**விஸ்தீரணம் : 12.59 பேர்ச்**

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேலே விவரிக்கப்பட்ட சொத்தை அதே இடத்தில் 2007.09.28 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் சொத்தை ஈடுவைத்தவரும் கடமைப்பட்டவருமான கோட்டே ஆச்சாரிகே நெல்சன் அவர்கள் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. என். மொஹொட்டி அவர்களால் 2005.05.27 ஆந் திகதிய முறி இல. 2753 இல் கொடுப்பனவில் தவறியுள்ளார்.

***தீர்மான அறிவித்தலுக்கு-*** தயவுசெய்து 2007.06.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.07.10 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின", "தினகரன்" பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** ஏலத்தின் இறுதியில் சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;

(2) உள்ளூராட்சி சபைக்கான ஒரு வீதம் (1%) ;

(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;

(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 2,000 ;

(5) கிளார்க், கூவுவோர் கட்டணமாக ரூ. 500 ;

(6) விளம்பர மொத்தச் செலவு.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள், காணி உறுதி மற்றும் ஆவணங்களைப் பரீட்சித்துப் பெற்றுக்கொள்ள "தலைமை அலுவலகம், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், கடன் மேற்பார்வை மற்றும் மீளப்பெறுகைத் திணைக்களம், பிரதம முகாமையாளரை" ஐத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 2661815, 2661816

ரஞ்சித்த எஸ். மஹநாம,
சமாதான நீதிவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர், ஏலதாரர்.

மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. : 2863121

9-454/1

---

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

### ஆதனம் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட செலான் மேர்ச்சன்ட் வங்கி, ரூபா 2,19,335.40 மற்றும் ரூபா 1,59,093.40 பணத்தொகையை 1999.10.19 ஆந் திகதி தொடக்கம் 29% வட்டி அத்துடன் வியாபார புரள்வு வரி என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்கும் அதன் பின்னர் முழுவதுமான கொடுப்பனவை செலுத்தி முடிக்கும் வரையான தீர்ப்பளிப் பளிக்கப்பட்ட முழுத்தொகை, வழக்குச் செலவு மற்றும் ஏலதாரர் கட்டணங்கள் ஆகியவற்றை அறவிடும் பொருட்டும் -

'மஹவ, பிரதான வீதி, இல. 9 ஐச் சேர்ந்த கம்மெத்த ஹேரத் முதியன்சேலாகே ஹரிஸ்சந்திர சந்திமா' என்பவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு (வழக்கு இல. 17268/MB) மூலம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட அதிகார ஆணையின் கீழ் ; அத்துடன் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய,

இதன் கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதும், இல. 9, பிரதான வீதி, மஹவ எனும் முகவரியில் அமைந்துள்ளதுமான ஆதனத்தை 2007, ஒற்றோபர் 12 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அவ்வாதனம் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

#### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி அத்பத்துவின் பஹல விசிதெகத கோறளையின் நெட்டிபொல கிராமத்தில் அமைந்துள்ளதும் "ஹபாயயே முகலான அல்லது தேக்கவத்த" (தற்போது தோட்டம்) (உரித்து உறுதி இல. 388543 இன் உபபிரிவாக உள்ளது) என அழைக்கப்படும் காணிக்கான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜீ. பந்துதிலக்கவால் தயாரிக்கப்பட்டதும் 15.06.1998 ஆந் திகதியிட்ட இல. 57/88 கொண்டதுமான வரைபடத்தில் துண்டு இல. 14 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதின் எல்லைகளாவன - வடக்கு : மஹவ தொடக்கம் மொறகொல்லாகம வரையான பிரதான வீதித் திட்டம் ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு இல. 152 ; தெற்கு : கோனோயா ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு இல. 13. மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 57/88 க்கு அமைய இக்காணியானது, அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் அனைத்துடனும் சேர்த்து, ஒரு ஏக்கர், மூன்று பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 3பே.) விஸ்தீரணமுடையதாகும். நிக்கவரெட்டிய காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் ட 33/7 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 57/88 இல் உள்ளதான சொல்லப்பட்ட காணித்துண்டு இல. 14. சமீபத்தில் எடுக்கப்பட்ட நிலஅளவையின்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :-

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம். வன்னி அத்பத்துவின் பஹல விசிதெக கோறளையில் நெட்டிபொல கிராமத்தில் அமைந்துள்ளதும் "ஹபயயே முகலான அல்லது தேக்கவத்த" (தற்போது தோட்டம்) (உரித்து உறுதி இல. 388543 இன் உபபிரிவாக உள்ளது) என அழைக்கப்படும் காணிக்கான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜீ. பந்துதிலக்கவால் தயாரிக்கப்பட்ட 16.01.1990 ஆந் திகதியிட்ட இல. 316/90 கொண்டதுமான வரைபடத்தில் துண்டு இல. 14 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதுமாகும். இதன் எல்லைகளாவன - வடக்கு : மஹவ தொடக்கம் மொறகொல்லாகம வரையான பிரதான வீதித் திட்டம் ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு இல. 15 ; தெற்கு : கோனோயா ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு இல. 13. மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 316/90 க்கு அமைய இக்காணியானது, அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் அனைத்துடனும் சேர்த்து, ஒரு ஏக்கர், மூன்று பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 3பே.) விஸ்தீரணமுடையதாகும்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம். வன்னி அத்பத்துவின் பஹல விசிதெக கோறளையில் நெட்டிபொல கிராமத்தில் அமைந்துள்ளதும் "ஹபயயே முகலான அல்லது தேக்கவத்த" (தற்போது தோட்டம்) (உரித்து உறுதி இல. 388543 இன் உபபிரிவாக உள்ளது) என அழைக்கப்படும் காணிக்கான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜீ. பந்துதிலக்கவால் தயாரிக்கப்பட்ட 10.12.1996 ஆந் திகதியிட்ட இல. 3253/96 கொண்ட வரைபடம் மற்றும் 15.06.1980 ஆந் திகதியிட்ட இல. 57/88 கொண்ட வரைபடம் ஆகியவற்றில் துண்டு இல. 14ஜி என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதுமாகும். இதன் எல்லைகளாவன - வடக்கு : நிக்கவெரட்டிய தொடக்கம் மொறகொல்லாகம வரையான பிரதான வீதித் திட்டம் ; கிழக்கு : வரைபடம் இல. 57/88 இல் உள்ளதும் பீ. எச். எம. ரூப்பஷாந்தி குமாரி ஹாமிக்கு சொந்தமானதுமா துண்டு இல. 15 ; தெற்கு : கோனோயா ; மேற்கு : வரைபடம் இல. 57/88 இல் உள்ளதும பீ. எச். எம். ஹேமமாலினி குமாரிஹாமிக்கு சொந்தமானதுமான துண்டு இல. 13. இதனது விஸ்தீரணம் ஒரு ஏக்கர், இருபத்தைந்து பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 25பே.) ஆகும்.

ஆதனத்தை அடையும் வழி.-மஹவ-மடகல்ல வீதி வழியாக சுமர் 1/2 மைல் தூரம் செல்ல 21 ஆவது கி. மீ. கல்லை சந்திக்கலாம். இவ்விடத்திலிருந்து சுமார் 100 யார் தூரம் சென்றதும், வீதியின் வலது பக்கத்தில் அமைந்துள்ள இவ்ஆதனத்தை அடையலாம்.

கொடுப்பனவு செய்யப்படும் விதம்.-ஏலவிற்பனை முடிவுற்றதும் வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை காசாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கான கட்டணம் 1% மற்றும் பெ. சே. வரி ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2 1/2% ;

(4) எழுதுவினைஞர் மற்றும் அறிவிப்பாளரின் வேதனம் மற்றும் வேலையாளர் கட்டணங்கள் ;

(5) நொத்தாரிசுக்கான அத்தாசிப்படுத்தற் கட்டணம் ரூபா 2,000 ;

(6) எஞ்சியுள்ள 75% மான தொகையை, ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேல் மாகாண வர்த்தக உயர் நீதிமன்றத்தில் இவ்வழக்கின் வரவிற்கு வைப்பீடு செய்யப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு.-"கொழும்பு 1, சனாதிபதி மாவத்தை, இல. 69 இல் உள்ள வரையறுக்கப்பட்ட செலான் மேர்ச்சன்ட் வங்கி" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 5511357.

ரஞ்சித எஸ். மஹாநாம,
(சமாதான நீதவான் - தீவுமுழுவதுக்குமான)
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

ஆர்.எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹாநாம டிறைவ்,
474, பிட்டகோட்டே,
தொலைபேசி இல. : 2863121.

9-454/ 2

---

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி - வெலிமடை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

**ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடுகிந்த உடு பளாத்தை, கோறளே வீதுரு பொல கிராமத்தில் இருக்கும் கெதர வெல்லவத்த என்ற பெயரால் அறிமுகப்படுத்தப்படும் காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். அலகநாயக்க என்பவரால் 2000.04.04 ஆந் திகதி அளந்துஇலக்கம் 103 என்ற வரைபடத்தின் பிரகாரம் வேறாக்கப்பட்ட லொட் 1 என்ற காணியும் அதற்கு அருகில் அமைந்துள்ள வீடும் மற்றும் அனைத்து சொத்துக்களும் ஆகும்.**

**விஸ்தீரணம் : பேர்ச்சஸ் 21.9**

பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு எம். ஸி. ஜே. பீரிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பெயரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 2002.09.23 மற்றும் 2004.08.30 ஆந் திகதியதும் தொடர் இலக்கம் 11161 மற்றும் 12645 என்ற முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தேவகேள்ளே கெதர ஹீன் பண்டா கடனாளராகவும் ஏகநாயக்க முதியன்சேலாகே நந்தசிரி கடனாளராகவும் அடகுவைப்பாளர் ஆகவும் தவணை தவறியுள்ளாராதலால்,

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என் மீது அளித்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007.10.02 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்கா.**-2006.10.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2006.11.09 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனை முடிவில் வெற்றி பெற்ற கொள்வனாவர் பின்வரும் பணங்களை ஏலவிற்பனையாளருக்கு செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூர் விற்பனை வரி 1% ;

(3) ஏலவிற்பனையாளரின் தரகுப் பணம் 2 1/2% ;

(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக 500 ;

(5) வேறு செலவினங்கள் ;

(6) நொத்தாரிசுக கட்டணம் ரூபா 2,000.;

கொள்வனவு விலையில் 90% பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹடடன் நஷனல் வங்கிக்குச் செலுததல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் 10% பணத்தை திரும்பவும் செலுத்தாது விடவும் அச்சொத்துக்களை மீண்டும் விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினைகளுக்கும் இதர குறிப்பிட்ட விபரங்களுக்கும் "ஹட்டன் நஷனல் வங்கி, கொழும்பு 10, டீ. பீ. ஜாயா மாவத்தை, இலக்கம் 479, பிரதான அலுவலகம், பிரதான முகாமையாளர் (கடன் அறவீடு), தொ. பே. இல. : 2661815, 2661816" இல் பெற்றுக் கொள்ளலாம்.

என். எச். பீ. எப். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும் அதிகாரம் பெற்ற
நிலஅளவையாளரும்.

இல 34/31, மற்றும் 32,
சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

9-494

## செலான் வங்கி லிமிட்டெட்-புத்தளம் கிளை

*1990 ஆம் ஆண்டின் வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

### காணி ஏல விற்பனை

(கடன்பட்டார் என்ற வகையில் புத்தளம் மஹவெலி கொங்க்ரீட் வர்க்ச் இடத்தில் அமைந்துள்ள ஸ்டைல் அன்ட் பர்ம் (சான்றிதழ் இல. 38-269) என்ற பெயரால் நடாத்திச் செல்லும் வியாபார நிறுவனத்தின் உரிமையாளரான புத்தளத்தைச் சேர்ந்த கோரால கமகே ஆனந்த மஹீபால பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்கான செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

மேற்குறிப்பிடப்பட்ட கீழ் அட்டவணைகளில் விபரிக்கப்படும் காணியை நான் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

### முதலாவது அட்டவணை

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், குளியாப்பிட்டிய செயலாளர் பிரிவு, யடிகஹகோரலே கட்டுகம்பொல ஹத்பத்துவ லபுயாய கிராமத்தில் அமைந்துள்ள மஹனுகலந்த தோட்டம் என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. அபயகோனினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இல. 5845 மற்றும் 1999.08.19 ஆந் திகதியிடப்பட்ட துண்டு இல. 1 மற்றும் 2 கொண்ட மற்றும் வரைவு இல. 6125 மற்றும் 2000.05.10 ஆந் திகதி அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. அபயகோனினால் மீள் வரைவுசெய்யப்பட்ட றூட் ஒன்று மற்றும் ஏழு தசம் எட்டு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 7.85பே.) (0.12102 ஹெக்டயார்) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள அனைத்தும் அடங்கலாக உள்ள காணி. மேற்படி காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் இல. J122/ 188 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், யடிகஹகோரலே தெற்கு, கட்டுகம்பொல ஹத்பத்துவ, குளியாப்பிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட போஹின்கமுவில் அமைந்துள்ள மஹனுகலந்த தோட்டம் என்றழைக்கப்படும் அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டாரவினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இல. 2354 மற்றும் 1999.03.14 ஆந் திகதி கொண்ட துண்டு இல. 8 கொண்ட முப்பது தசம் எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 30.8பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள கட்டிடங்கள் அடங்கலாக உள்ள காணி. மேற்படி காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் இல. J120/ 131 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. போஹின்கமுவவில் அமைந்துள்ள மஹனுகலந்த தோட்டம் என்றழைக்கப்படும் மேற்படி காணி வரைவு இல. 2354 மற்றும் துண்டு இல. 13 இன்படி முப்பத்தைந்து பேர்ச் (0ஏ. 0றூ. 35பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள கட்டிடங்கள் அடங்கலாக உள்ள காணி. மேற்படி காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் இல. J120/ 129 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேற்படி காணியை சென்றடைவதற்கான பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியை உபயோகிப்பதற்கான அனுமதியுடன் கூடியது. மேற்படி வரைவு இல. 2354 மற்றும் துண்டு இல. 4 மற்றும் 6 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**காணியைச் சென்றடைகின்ற வழி**.- (முதலாம் அட்டவணை).- குளியாப்பிட்டிய நகர மையத்திலிருந்து சுமார் 2.6 கி. மி. நாரம்மல வீதியூடாகச் சென்று வலது புறமாகவுள்ள காணியைச் சென்றடையலாம். (குளியாப்பிட்டிய நகர சபை எல்லையைக் குறிக்கும் பெயர்ப்பலவை நடப்பட்டுள்ள இடத்திற்கு 100 மீட்டர் முன்பதாக).

**(இரண்டாவது அட்டவணை)** குளியாப்பிட்டிய நகர மையத்திலிருந்து சுமார் 2.6 கி. மி. குருணாகல் வீதியில் (குளியாப்பிட்டிய நகர சபை எல்லையைத் தாண்டி சுமார் 50 மீட்டர் சென்று) வலது பக்கம் திரும்பி 110 மீட்டர் தூரம் சென்றதும் 10 அடி அகலம் கொண்ட தனியார் செம்மண் வீதியில் (துண்டு இல. 4) சென்று குறித்த காணியைச் சென்றடையலாம். அவ்விடத்தில் வீதிக்காக ஒதுக்கப்பட்ட காணியின் மத்தியில் கொன்க்ரீட்டினால் நிறுவப்பட்ட மின்சாரக் கம்பம் ஒன்று நாட்டப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்ளவும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2007.06.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2007.06.14 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" மற்றும் "2007.06.16" ஆந் திகதிய வீரகேசரி நாளிதழ்களையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500 ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி இல. : 2696155, 2572940.

9-496

**வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனத்தின் ஏல விற்பனை**

**8972 ஆம் ஈட்டு முறியின் மூலம் ஈடு வைக்கப்பட்ட ஆதனம்**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம்,ஹத்த ஹேவாஹெட்ட, தெற்கு கம்தஹய கோறளை, பூட்டாவத்தையில் அமைந்துள்ள கண்டி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. ஸ்பென்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட, 1946, பெப்புருவரி 4 மற்றும் ஒற்றோபர் 2 ஆந் திகதியிடப்பட்ட இல. 377/ 100 கொண்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நிக்கதன்னவத்தை எனும காணியில் இல. 3, 4, 5, 6 என குறிக்கப்பட்ட காணித்துண்டுகளின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் மூன்று றூட் பதின்மூன்று பேர்ச்சஸ் (2ஏ. 3றூ. 13பே.) ஆகும். மேற்கூறிய காணியை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். கெக்குலந்த அவர்கள் மீள் அளவை செய்து தயாரித்த 1986 ஓகத்து 28 ஆந் திகதிய இல. 329 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஸ்பென்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1946 ஆம் ஆண்L பெப்புருவரி மாதம் 04 ஆந் திகதி, ஒற்றோபர் மாதம் 2 ஆந் திகதி இடப்பட்ட இல. 377/100 கொண்ட வரைபடத்தில் பூட்டாவத்தை நிக்கதன்னவத்தையின் 3, 4, 5, 6 ஆம் இலக்க காணித்துண்டுகளாகும். அத்துடன் அதன் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் மூன்று றூட் முப்பது பேர்ச்சஸ் (2ஏ. 3றூ. 30பே.) எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறிய காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. பீ. வெத்தாவ அவர்களால் மீண்டும் மீள்அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு மாச்சு 17 ஆந் திகதிய 3437 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என காட்டப்பட்டுள்ள காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். கெக்குலந்த அவர்களால் தயாரிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய 329 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என குறிக்கப்பட்டுள்ள காணி.*

***(காணியின் விஸ்தீரணம் : 2ஏ. 3றூ. 30பே.)***

(இரண்டு ஏக்கர் மூன்று றூட் முப்பது பேர்ச்சஸ்)

*(அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்களும் பயிர்களும் மற்றைய சகலதும் அடங்கலாக)*

*(மாத்தளையைச் சேர்ந்த மாயழகு சஷீகரன் என்பவரால் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், 2007, ஒற்றோபர் 5 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**-விற்பனை உறுதிப்படுத்தப் பட்டதும் கொள்வனவாளர் கீழ்க்காணும் கொடுப்பனவுகளை காசாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் வரி 1% (ஒரு வீதம்);

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 .5% (இரண்டு தசம் ஐந்து வீதம்);

(4) நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தற் கட்டணம் ரூ. 2,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) சகல விற்பனை விளம்பரங்களின் மொத்தச் செலவுகள் ;

(7) இலங்கை குடியரசினால் அல்லது வேறு அதிகாரம் பெற்றவர்களினால் நியமிக்கப்படும் சட்டமாக்கப்பட்ட அறவீடுகளும் மற்றைய வரிகளும் உட்பட கொள்வனவு விலையின் மிகுதி (90%) தொண்ணூறு வீதமும் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் ;

மேலதிக விபரங்களுக்கு.-வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின், சட்ட அலுவலருடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 011-4313158.

காமினி பி. எஸ். தியாவ,
ஏலதாரர், விலைமதிப்பிடுநர் மற்றும் தரகர்.

இல. 247, பிரீத்திபுர வீதி,
பல்லியாவத்தை,
ஹெந்தளை,
வத்தளை.
தொலைபேசி இல. : 0777 281 723

9-499